## நான் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கைகள் யாவை?

இருதயக் கோளாறுகள் அல்லது இரத்தக் கொதிப்பு போன்ற மருத்துவப் பிரச்னைகள் இருந்தால், மருத்துவரிடம் கூறுங்கள். உங்களுக்கு பக்க-விளைவுகள் ஏற்படாமலிருக்க தைராக்ஸின் மாத்திரைகள் குறைந்த அளவில் கொடுக்கப்படலாம். உங்களுக்கு நீரிழிவு நோய் இருந்தால், இன்சுலின் அல்லது நீரிழிவு-எதிர்ப்பு மருந்துகளை நீங்கள் கூடுதலாக எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும்

தற்போது நீங்கள் வேறு மருந்துகள் எடுத்து வந்தால், அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள். குறிப்பாக, வார்ஃபாரின் (warfarin), வலிப்பு நோய் மருந்துகள் மற்றும் கருத்தடை மாத்திரைகள். மேலும், ஆரோக்கிய துணைஉணவுகளை (health supplements) எடுப்பதற்கு முன், மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் விசாரியுங்கள்.

நீங்கள் கர்ப்பம் தரிக்க திட்டமிட்டிருந்தால் அதையும் மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## மருந்தை நான் எப்படி வைத்திருக்க வேண்டும்?

மருந்தை, அது முதலில் இருந்த டப்பாவிலேயே போட்டு, குளிர்ச்சியான, உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். மருந்தின்மீது ஈரம், வெப்பம், நேரடி சூரியஒளி படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.


Ministry of Health

National Healthcare Group

SingHealth



# நோயாளி தகவல் கையேடு



# தைராக்ஸின் சோடியம்

## Thyroxine Sodium

T62R0

## உங்கள் மருந்து பற்றிய தகவல்

மருத்துவர் தைராக்ஸின் சோடியம் மாத்திரைகளை உங்களுக்குக் கொடுத்திருக்கிறார். தைராக்ஸின் என்பது தைராய்டு சுரப்பி உற்பத்தி செய்யும் ஒரு முக்கிய ஹார்மோன் ஆகும். இது உடலின் வளர்சிதை மாற்ற (metabolic) செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

தைராய்டு சுரப்பி குறைவான தைராக்ஸினை உற்பத்தி செய்யும்போது ஹைப்போதைராய்டிஸம் (Hypothyroidism) என்னும் நிலை ஏற்படுகிறது. இந்நிலை இயற்கையிலேயே தைராக்ஸின் குறைவாகச் சுரப்பதால் ஏற்படலாம், அல்லது ரேடியோ-அயோடின் சிகிச்சை செய்யப்படும்போது வரலாம், அல்லது தைராய்டு சுரப்பி அதிகமாக உற்பத்தி செய்ததால் அது அறுவை சிகிச்சை செய்து அகற்றப்பட்டதன் காரணமாக ஏற்படலாம். இத்தகைய சூழ்நிலைகளில் உடலில் உண்டாகும் தைராக்ஸின் பற்றாக்குறையை இந்த மாத்திரைகள் தைராக்ஸினைத் தந்து சரிசெய்கின்றன. அதனால், உடலின் வளர்சிதை மாற்றங்களும் வழக்கநிலைக்குத் திரும்புகின்றன.

## மருந்தை நான் எப்படி உட்கொள்ள வேண்டும்?

தைராக்ஸின் மாத்திரைகள் வெகு நேரத்திற்கு வேலை செய்யக்கூடியவை. இவற்றை ஒரு நாளைக்கு ஒரு முறை, வழக்கமாக காலை உணவுக்கு அரை மணி நேரம் முன்னதாக உட்கொள்ள வேண்டும்.

மருந்தின் அளவு நோயாளிக்கு நோயாளி வேறுபடும். மருத்துவர் ஓர் எளிய இரத்தப் பரிசோதனை செய்து, நோயாளியின் தேவைக்கேற்ற மருந்தின் அளவைத் தீர்மானிப்பார்.

பெரும்பாலான நோயாளிகள், ஒரு நாளைக்கு 50 மைக்ரோகிராமிலிருந்து 200 மைக்ரோகிராம் மருந்து எடுக்கிறார்கள். மருந்து தொடக்கத்தில் குறைந்த அளவில் ஆரம்பிக்கப்பட்டு (வயதானவர்களுக்கும், நெஞ்சுவலி போன்ற இருதயப் பிரச்னை உள்ளவர்களுக்கும் ஆரம்பத்தில் 25 மைக்ரோகிராம் மட்டுமே தரப்படுகிறது), பிறகு படிப்படியாக உயர்த்தப்படும். இப்படிச் செய்வது பக்க-விளைவுகளைக் குறைக்க உதவும்.



நோயாளி தகவல் கையேடு । **தைராக்ஸின் சோடியம்**

## மருந்து உட்கொள்ள நான் மறந்துவிட்டால் என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளையிலிருந்து வழக்கம்போல் தொடருங்கள். முதல் வேளையில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு உட்கொள்ளாதீர்கள்.

## இம்மருந்து ஏற்படுத்தக்கூடிய பக்க-விளைவுகள் யாவை?

இது தைராக்ஸின் ஹார்மோனை மீண்டும் தரும் சிகிச்சை என்பதால், உங்கள் தேவைக்கேற்ப மருந்து தரப்பட்டாலும்கூட, ஒரு சில பக்க-விளைவுகள் இருக்கவே செய்யும்.

தேவைக்கும் அதிகமான மருந்தை நாள்தோறும் எடுத்துவந்தால், இதயப் படபடப்பு மற்றும் நெஞ்சு வலி (குறிப்பாக இருதய நோய்கள் உள்ளவர்களுக்கு), தசைப் பிடிப்பு, வியர்வை, உடல் நடுக்கம், வயிற்றுப்போக்கு, பரபரப்பு, தூக்கமின்மை மற்றும் தலைவலி ஏற்படலாம். மேற்கூறிய அறிகுறிகளோ, அல்லது வழக்கத்திற்கு மாறான வேறு அறிகுறிகளோ தோன்றினால், உடனே மருத்துவரிடம் தெரிவியுங்கள். எனினும், மருந்தின் அளவு குறைக்கப்படும்போது அல்லது மருந்து நிறுத்தப்படும்போது, இந்த பக்க-விளைவுகள் பொதுவாக மறைந்துவிடும்.

சிலருக்கு எப்போதாவது, தோல் தடிப்பு, அரிப்பு மற்றும் வீக்கம் போன்ற ஒவ்வாமை அறிகுறிகள் ஏற்படலாம்.